# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2022ஆம் ஆண்டு ஜனவரி 2022 மாதம் 24 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 24.01.<br>2022 | **1)** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று மூன்றாவது அலை வெகு வேகமாக பரவி வருகின்ற காரணத்தினால் தொற்று பாதிப்பிற்குள்ளான நோயாளிகளை தினசரி பரிசோதனை மையம் வ.உ.சி. பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கு கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட உள்ளது. எனவே மேற்படி மையத்தில் உள்புறம், வெளிப்புறம் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்வது போன்ற தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். தற்போது கொரோனா (ஒமிக்ரான்) தொற்று பரவல் காரணமாக பள்ளிகள் இயங்காத நிலையில், பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணியினை மேற்கொண்டு வரும் தூய்மை பணியாளர்களை கொரோனா சிகிச்சை மையத்தில் பணியமத்திடவும் மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகும் செலவினத்தை இம்மாநகராட்சி கொரோனா நிதி / பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/02192/2021 | **52)** அலுவலக குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | **2)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா பிரிவின் மூலம் கொசுப்புழுக்கள் ஒழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை ஒழிக்க பயன்படுத்தப்படும் Temephos (Abate) என்கிற வேதி மருந்து மிகக் குறைந்த அளவு இருப்பு உள்ளதால் Temephos (Abate) மருந்தினை கொள்முதல் செய்வதற்கு Tamil Nadu Medical Services Corporation Ltd. (TNMSC) அனுமதி பெற்ற M/s. Unikil Pesticides (P) Ltd நிறுவனத்தின் மூலம் 1 லிட்டர் ரூ. 693.50 + 18% GST வீதம் 2000 லிட்டர் வாங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 17,00,000/–னை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்2/04536/2021 | **53)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **3)** மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ராவ் பகதூர் குருஸ் பர்னாந்த் அவர்களுக்கு தூத்துக்குடி மாநகரில் மணிமண்டபம் அமைக்கப்படும் என 13.11.2021 நாளிட்ட செய்தி வெளியீடு எண். 1105ன் மூலம் தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.<br><br>தமிழ்நாடு அரசு செய்தியின்படி செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை கட்டட (க&ப) கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 379ஆ பவி/இவஅ1./கோ,79/2021 நாள் 23.11.2021ல் ராவ்பகதூர் குருஸ்பர்னாந்து அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்பதற்கு உரிய இடத்தினை தேர்வு செய்து பொதுப்பணித்துறைக்கு நில ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி கடிதம் வரப்பெற்றதன் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலம் தெற்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான ரோச் பூங்கா வார்டு D பிளாக் எண்.2 நகரளவு எண். 3ல் தெற்கு மூலையில் ராவ் பகதூர் குருஸ் பர்னாந்து நினைவு மண்டபம் அமைப்பதற்கு 20 சென்ட் இடத்தினை பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப) கோட்டம் தூத்துக்குடி அலுவலகத்திற்கு நில ஒதுக்கீடு செய்து முன் நுழைவு அனுமதி பெறுவதற்கு அரசின் அனுமதி பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வழி அரசுக்கு உத்தேசம் சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.எப்1/2298/2021 (மே.ம) | **54)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | **4)** இம்மாநகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் பணிகளுக்கான அடிப்படை பணிகளான வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், வேட்பு மனு படிவங்கள், தேர்தல் கையேடுகள் வாக்குப்பதிவுக்கு தேவையான எழுது பொருட்கள், வாக்கு எண்ணிக்கை மையத்திற்கான தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களான மண்டல அலுவலர்கள், மண்டல நுண் மேற்பார்வையாளர்கள், பார்வையாளர்கள், தேர்தல் அலுவலர்களுக்கான ஊதியம் வழங்குதல், மின்னனு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வாக்குப்பதிவு மையத்திற்கு கொண்டு செல்வதற்கான வாடகை வாகனங்களுக்கான செலவினங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலும் மேற்கண்ட செலவினங்களுக்கான உத்தேச தொகை ரூ. 3.47 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு தேர்தல் செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம் சி1/4169/2021 | **55)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | **5)** தூத்துக்குடி மாநகராட்சி வல்லநாடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் சுத்திகரிப்பிற்கு தேவையான குளோரின் 2022–23ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கான | **56)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | உத்தேச மதிப்பீடு தொகை ரூ 14.00 இலட்சம் ஆகிறது. மேலும் குளோரின் தயாரிப்பு நிறுவனமான தாரங்கதாரா கெமிக்கல்ஸ், சாகுபுரம் அவர்களிடமிருந்து நேரடியாக வாங்குவதால் உள்ளூர் விலையை விட குறைவாக உள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திடமிருந்து அவ்வப்பொழுது தொகை செலுத்தி குளோரின் பெற்று கொள்வதற்கும், இதற்கு தேவையான போக்குவரத்து கட்டணம் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொண்டு வாங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மேற்படி செலவினம் ரூ. 14.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்<br>2) குளோரின் கேஸ் ஓராண்டிற்கு தாரங்கதாரா கெமிக்கல்ஸ் நிறுவனம் சாகுபுரத்திலிருந்து நேரடியாக வாங்கி கொள்ள அனுமதிக்கலாம்<br>3) போக்குவரத்திற்கு கட்டணத்தினை உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரி அமர்த்திக்கொண்டு வழங்கிட அனுமதி அளிக்கலாம்.<br><br>ந.க.எண்.0239/இ2/2022 | |
| | 6) கொரோனா தொற்று நோய் தீவிரமாக பரவி வருவதனை தடுக்கும் பொருட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் அனைத்து விதமான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரியும் மருத்துவ அலுவலர்களுக்கு தொற்று ஏற்படுதல் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களுக்கு விடுமுறையில் செல்லும்போது பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி கோவிட் 19 கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று கண்காணித்தல் மற்றும் தொடர் சிகிச்சை அளித்தல் போன்ற களப்பணிகளை மேற்கொள்ளவும், மருத்துவ பணிகளில் உதவி புரிய 01.01.2022 முதல் 28.02.2022 வரை தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் (2 ஆயுஸ் AYUSH மருத்துவர்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.<br>இவ்வாறான நிலையில் கொரோனா தடுப்பு பணிகள் எவ்வித தடையுமின்றி நடைபெற ஏதுவாகவும் எதிர் வரும் காலங்களில் மேற்படி நோயின் தீவிர தாக்கமான 3வது அலையின் தொடர்ச்சியாக எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளை கையாளுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான மருத்துவ பணிகளில் உதவி புரிய தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் ( 2 ஆயுஸ் AYUSH மருத்துவர்) 01.03.2022 முதல் 30.04.2022 வரை நியமனம் செய்து கொள்வதற்கும், அதற்கான ஊதியம் (மாதம் 30,000/–) கோவிட்/ மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** | 57) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

01.03.2022 முதல் 30.04.2022 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.1,20,000/—க்கு கோவிட்/ மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.எச்1/2021/2021

7) இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட போது அருகில் உள்ள தூத்துக்குடி ரூரல், சங்கரப்பேரி, மீளவிட்டான், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டது. அப்போது இம்மாநகராட்சியில் 51 வார்டுகள் மற்றும் பஞ்சாயத்துகள் பகுதிகள் சேர்த்து 60 வார்டுகள் உள்ளடங்கியதாகும். மாநகராட்சிக்கான அடிப்படை பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 24100/பி3/2017 நாள் 31.10.2017ன் படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்படும் காலி இடங்களை தனியார் மூலமாக மாமன்ற அனுமதியுடன் Tender Act Rules 2000ன்படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி ஏதும் பெற தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| வ. எண் | பணியிட விபரம் | பணியாளர் எண்ணிக்கை | ஒரு நாள் ஊதியம் ரூ. | 2 மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர்கள் | 630 | 354 | 1,36,04,220/— |
| 2 | கம்போஸ்ட் சூப்பர்வைசர் | 1 | 400 | 24,400/— |
| 3 | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 400 | 320 | 78,08,000/— |
| 4 | மேற்பார்வையாளர்கள் | 70 | 400 | 17,08,000/— |
| 5 | TATA ACE வாகன ஓட்டுனர்கள் | 169 | 426 | 43,91,634/— |

58) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | தூய்மைக் காவலர்கள் | 20 | 481 | 5,86,820/– |
| 7 | சுகாதாரபிரிவு கணினி இயக்குபவர் | 19 | 481 | 5,57,479/– |
| 8 | நகர சுகாதார செவிலியர் | 3 | 11000 (மாதம்) | 66,000/– |
| 9 | பள்ளி கழிவறை பராமரிப்பு தூய்மைப் பணியாளர்கள் | 37 | 354 | 7,98,978/– |
| 10 | போட்டோகிராபர் | 1 | 633 | 38,613/– |
| | மொத்தம் | 1350 | | 2,95,84,144/– |

மேற்படி பணியிடங்களுக்கான அனுமதி 28.02.2022 உடன் நிறைவு பெறுகிறது. எனவே மேற்படி பணியிடங்களின் அவசர அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி தொடர்ந்து பொது சுகாதார பணிகள் எவ்வித தடையின்றி நடைபெற ஏதுவாக மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களை 01.03.2022 முதல் 30.04.2022 முடிய உள்ள காலங்களில் பணியமர்த்திக் கொள்ள அனுமதிக்கவும், மேலும் அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.3.00 கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) 01.03.2022 முதல் 30.04.2022 வரை நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00 கோடிக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.எச்1/296/18

8) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள காலிமனை மற்றும் சொத்துவரி நிர்ணயம் செய்யும்போது மேற்படி மனை மற்றும் கட்டிடத்திற்கு கடந்த காலங்களில் வரி நிர்ணயம் செய்யாத நிலையில் பயன்பாட்டின் அடிப்படையில் 13 அரையாண்டுகளுக்கு காலிமனை வரிநிர்ணயம் செய்யப்படும் நடைமுறையானது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழகத்திற்கு (SIPCOT) சொந்தமான நிலங்களை தொழில் வளர்ச்சி திட்டங்களுக்காக தனிநபர் மற்றும் நிறுவனங்களின் பெயரில் குத்தகை/கிரையம் செய்யப்படும் நிலையில் தற்போது நடைமுறையில் உள்ளவாறு 13 அரையாண்டுகளுக்கு வரிநிர்ணயம் செய்யப்பட்டு வருவதற்கு பதிலாக சிப்காட் வணிக வளாகத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடங்களுக்குரிய காலிமனை வரி நிர்ணயம் செய்யும் போது மேற்படி இடம் குத்தகை மற்றும் கிரையம் செய்யப்பட்டது தொடர்பாக பத்திர பதிவு செய்யப்பட்ட நாளை அடிப்படையாகக் கொண்டு நிதியாண்டின் முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டிலிருந்து காலிமனை வரி நிர்ணயம் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

59) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு**<br><br>மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ1/821/2009 | |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சிக்குப்பட்ட, செங்குளம் ஓடை முதல் உப்பாறு முடிய தேசிய நெடுஞ்சாலை எண் NH 7A வழியாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந6) அரசாணை (டி) எண்.6, நாள் 23/01/2018 மற்றும் 4வது சீர்மிகு நகர உயர்மட்ட திட்ட ஒப்புதல் குழு கூட்ட நடவடிக்கை நாள் 14.08.2018ன் படி ரூ.63.87 கோடிக்கு நிர்வாக அனுமதியும் மற்றும் தலைமை பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாகம் ஆணையரகம் அவர்களின் கடிதம் எண் 9592/2017/DO1, நாள் 28.09.2018ன் பிரகாரம் ரூ.63.87 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது.<br><br>இதனைத் தொடர்ந்து மேற்படி பணியினை மேற்கொள்ள மெசர்ஸ். ஸ்ரீசிவராம் அன் கோ, நிறுவனத்திற்கு 01.03.2019ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு ரூ.58,62,61,470/– (ஜி.எஸ்.டி நீங்கலாக) தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்த தொகையானது மதிப்பீட்டை விட 9.82 சதவீதம் அதிகமாகும்.<br><br>மேற்படி பணிக்கு மதிப்பீட்டின் படி Chainage 2.440 கி.மீ முதல் 6.130 கி.மீ வரை 3690 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை பகுதியில் வருவதால் திட்ட அலுவலர் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அவர்களின் கடிதம் எண் NHAI/PIU/TUT/NH-138/2020, நாள் 08.01.2020ன் படி 7.00 மீ அகலமுள்ள, 2.82 மீட்டர் இரண்டு கண்கள் கொண்ட காங்கிரிட் பாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்படி வடிகால் அமைக்கும் பணிக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கைக்கு மாற்றாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட அலுவலரின் அறிவுறுத்தலின் பேரில் திருத்தப்பட்ட வடிவமைப்பினை மூன்றாம் தரப்பு அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் மூலம் திருத்தி வடிவமைப்பு பெறப்பட்டு மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.<br><br>மேற்படி திருத்திய வடிவமைப்பின் படி, மதிப்பீட்டில் அளவுகளை விட தரைத்தளம், மூன்று சுவர்கள், மேல்மட்ட காங்கிரிட் அளவுகள் கூடுதல் அளவுகளுடனும் மற்றும் கம்பி வடிவமைப்பு மாற்றம் செய்யப்பட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வின் போது மேற்படி மழைநீர் வடிகால் அமைக்கும் பணியில் உப்பாறு ஓடையின் முகத்துவாரம் பகுதியில் தடுப்புச்சுவர் இரு புறமும் கட்டி மழைநீர் வழிப்பாதையை நேர்படுத்தவும் மேலும் தடுப்புச்சுவர்களுக்கு இடைப்பட்ட பகுதியை மேம்படுத்தி பூங்கா அமைக்கவும் அறிவுரை வழங்கப்பட்டது. அதன் பேரில் மேற்படி பணியில் RCC தடுப்புச்சுவர் 498 மீட்டருக்கு பணி கூடுதலாக மேற்கொள்ளப்பட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப அவர்களால் 10.06.2021ல் மேற்படி பணியினை ஆய்வு செய்யப்பட்ட போது செங்குளம் ஓடை முதல் உப்பாறு ஓடை வரையிலான | 60) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பணிகளில் உப்பாறு ஓடையின் முகத்துவாரம் பகுதியில் உள்ள வீரநாயக்கன்தட்டு சாலையில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த பாலத்தை அகற்றிவிட்டு புதிதாக பாலம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது அதன் பேரில் மேற்படி பணியானது கூடுதலாக மேற்கொள்ளப்பட்டது.<br><br>இதுதவிர மேற்படி பணியில் பயன்படுத்தப்பட்ட சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகளின் விலை உயர்வு காரணமாக (Price Escalation) மதிப்பீட்டினை விட 10.7 சதவீதம் கூடுதலாக செலவினம் தற்போது வரப்பெற்றுள்ளது.<br><br>மேற்கண்ட காரணங்களால் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியானது ரூ.81.24 கோடிக்கு ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்காரணமாக மேற்படி பணிக்கு செலவினம் மதிப்பீட்டினை விட 17.37 கோடி அதிகமாகி உள்ளது.<br><br>ஏனவே, மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவுகளை விட கூடுதல் அளவுகளுடன் பணி மேற்கொள்ளப்பட்டது மற்றும் விலை உயர்வு (Price Escalation) ஆகியவற்றின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வேலை சீட்டு தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வேலை சீட்டு (Work Slip) தலைமை பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் ஒப்புதல் வரப்பிற்குள் மேற்படி வேலை சீட்டின் மீது தலைமை பொறியாளரின் ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்:இ1/3209/2015 (SWD Ph-I Pak – V) | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு பகுதியில் மழை நீர் வடிகால் வசதி இல்லாததால் மழைக்காலங்களில் மழை நீரானது குடியிருப்பு பகுதிகளில் அதிகமாக தேங்கி நோய் தொற்று மற்றும் பொதுமக்கள் வெளியில் வரமுடியாத நிலை இருந்து வந்ததால் மேற்படி பகுதிகள் மற்றும் காட்டாற்று வெள்ள நீரை தேக்கி வைத்திடும் வகையில் மீளவிட்டான் பகுதியில் அமையபெற்றுள்ள சி.வா குளமானது TNSUDP திட்டம் 2017–18ன் கீழ் சுமார் 11.50 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தப்பட்டு, மழைக்காலங்களல் மழைநீர் மற்றும் காட்டாற்று வெள்ளநீர்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகாத வகையில் மேற்படி குளத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.<br><br>தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகர திட்டம், TNSUDP திட்டம் மற்றும் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகளை 17–01–2022–ல் ஆய்வு மேற்கொண்ட அரசு கூடுதல் தலைமை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை அவர்கள் மேற்படி சி.வ குளத்தினை பார்வையிட்ட போது குளத்திளை சுற்றி மரங்கள் அமைத்து பசுமையான இயற்கை சூழலில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் குளத்தின் கரைகளில் சுமார் 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு கைப்பிடியுடன் கூடிய நடை மேடை அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கியுள்ளார்கள்.<br><br>எனவே மேற்படி சி.வ. குளத்தின் கரையில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் சுமார் 2 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு கைப்பிடியுடன் | 61) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கூடிய நடைமேடை அமைத்திட நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி திட்டத்திற்கான பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் இருந்து சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியின் கீழ் பெறப்பட்ட தொகை ரூ.70,00,000/– பயன்படுத்தி கொள்ளும் பொருட்டு சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியில் இருந்து ரூ.70,00,000/– நமக்கு நாமே திட்டத்தின் பொதுமக்கள் பங்களிப்பு நிதிக்கு மாற்றம் செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி1/3917/2017 | |
| | 11) தூத்துக்குடி நகரமானது தூய்மை அடையா நகரமாக கடந்த 08.10.2018 அன்று தேசிய மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமானது தூத்துக்குடி மாநகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டுக்கான மானிய தொகையாக ரூ.3.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. இந்த மானியத் தொகையை பயன்படுத்தி தூத்துக்குடி நகர காற்றின் தரத்தை மேம்படுத்தவும், மேலும் காற்று மாசுப்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் தூத்துக்குடி மாநகராட்சி செயல்படுத்தவுள்ள நகர செயல் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நகர செயல் திட்ட செயல்பாடுகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.3.06 கோடி மதிப்பீட்டிலான பணிகளில் உடனடித் தேவை மற்றும் அத்தியாவசியத்தின் அடிப்படையில் முதல் கட்டமாக shredder machine-4, Road sweeper machine-2, Tata Ace vehicle-4 என்கிற எண்ணிக்கையில் மேற்கண்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்கனை வாங்குவதற்கு தோராயமாக ரூ.1.86 கோடி செலவு மேற்கொள்ள வேண்டிய சூழலில் மேற்கண்ட வாகனங்கள் வாங்குவதற்கு மாமன்ற அனுமதி வழங்கிட வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.இ3/01212/2021 | 62) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 12) தூத்துக்குடி மாநகராட்சிக்கான 2022–2023ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடுகள் மற்றும் 2021–22ம் வருடத்திய திருத்திய வரவு செலவு மதிப்பீடுகள் 1) வருவாய் மற்றும் மூலதன நிதி 2)குடிநீர் மற்றும் வடிகால் நிதி 3)ஆரம்ப கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்<br><br>பி1/419/21 | 63) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 13) தூத்துக்குடி நகரமானது தூய்மை அடையா நகரமாக கடந்த 08.10.2018 அன்று தேசிய மாசுகட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் மூலம் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமானது தூத்துக்குடி மாநகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டுக்கான மானிய தொகையாக ரூ.3.06 கோடி | 64) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு செய்து தொகை வரப்பெற்றுள்ளது.<br><br>மேற்படி இந்த மானியத் தொகையை பயன்படுத்தி தூத்துக்குடி நகர காற்றின் தரத்தை மேம்படுத்தவும், மேலும் காற்று மாசுப்படுவதை தடுக்கும் நோக்கத்துடனும் தூத்துக்குடி மாநகராட்சி கீழ்கண்ட நகர செயல் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. shredder machine-4, Road sweeper machine-2, Tata Ace vehicle-4, காடு வளர்ப்பு, Baling machine-1 பொது விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு செயல், மொபைல் அமலாக்க பிரிவு என்ற பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளபடவுள்ளது.<br><br>அந்த நகர செயல் திட்ட செயல்பாடுகளின் ஒன்றான காடு வளர்ப்பு பணிக்காக இம்மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் சர்வே எண்.398 மற்றும் இம்மாநகராட்சிக்கு சொந்தமான தருவை உரக்கிடங்கு பகுதியில் அமைந்துள்ள பகுதியினை மாவட்ட வன அலுவலத்திற்கு வழங்கிடவும், காடுகள் வளர்ப்பு பணிக்காக தேசிய தூய்மை காற்று திட்டத்தின் மூலம் (National Clean Air Programme) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி தொகையான ரூ.30 இலட்சத்தை மாவட்ட வன அலுவலகத்திற்கு வழங்கிடவும் மாமன்ற அனுமதி வழங்கிட வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**: மாமன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.இ3/01212/2021 | |
| | 14) தூத்துக்குடி மாநகராட்சியில் அமைக்கப்படவுள்ள 1) கணக்கு குழு (Accounts Committee) 2) கல்விக்குழு (Education Committee) 3) பொது சுகாதார குழு (Public Health Committee) 4) வரிவிதிப்பு, நிதி மற்றும் வரிமேல்முறையீடு அல்லாமல் குழு (Taxation and Finance Committee ) 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு குழு (Town Planning and Improvement Committee) 6) பணிகள் குழு (Works Committee ) ஆறு நிலைக்குழுக்களில், தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 545 நாள் 22.11.2021ன் படி பெண்களுக்கு 50 இட ஒதுக்கீடு வழங்க அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதன் பேரில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒவ்வொரு நிலைக்குழுவிலும் ஆண்கள் 3 நபர்களும், பெண்கள் 3 நபர்களும் என்ற விகிதத்தில் மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அ.கு.** 1) பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>2) ஒவ்வொரு நிலைக்குழவிலும் ஆண்கள் 3 நபர்கள், பெண்கள் 3 நபர்கள் என உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாமன்றம் நிர்ணயிக்கலாம். | 65) அலுவலகக் குறிப்பு 1 பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 21–01–2022

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி